# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
# சுவிற்சர்லாந்து தமிழ்ச்சங்கம்

# 2024 தைப்பொங்கல் விழாவினை

## முன்னிட்டு நடாத்தப்பெறும்

## கட்டுரை, கவிதைப்போட்டிகள்

தமிழ்க் கல்விச்சேவையும் சுவிற்சர்லாந்து தமிழ்ச்சங்கமும் இணைந்து 03.02.2024 ஆம் நாள் நடாத்தும் மாபெரும் தைப்பொங்கல் விழாவினை முன்னிட்டு கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள் நடாத்தப்பெறுகின்றன. இப் போட்டிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சுவிஸ்வாழ் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

- கட்டுரை, கவிதைகளுக்கான விடயப்பரப்பு: **தமிழர் பண்பாடும் மரபுகளும்**

- **முடிவு நாள்: 20.01.2024 ஆம் நாள் சனிக்கிழமை** (முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கட்டுரைகள், கவிதைகள் போட்டிக்காக ஏற்றுக்கொள்ளப்பெறமாட்டாது).

- ஆக்கங்கள் அனைத்தும் **கையெழுத்துப் பிரதியாக** இருப்பதுடன், ஆக்கங்களுடன் போட்டியில் பங்குபற்றுபவரின் விபரங்களை உள்ளடக்கிய, **இத்துடன் இணைக்கப்பெற்றுள்ள படிவத்தையும் போட்டியாளர் கையெழுத்தில் நிறைவுசெய்து, கையொப்பமிட்டு தவறாது அனுப்பிவைத்தல்** வேண்டும். ஒவ்வொரு ஆக்கத்திற்கும் ஒவ்வொரு படிவம் இணைக்கப்பெறல் வேண்டும். **ஆக்கங்களில் போட்டியாளர் பெயர்களைக் குறிப்பிட வேண்டாம்.** போட்டியில் பங்குபற்றும் **தமிழ்க் கல்விச்சேவையின் மாணவர்கள், ஆசிரியர்கள் அல்லாதவர்கள், வயதினை உறுதிப்படுத்துவதற்காக, தங்களின் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் நிழற்பிரதியினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.**

- ஆக்கங்கள் அனைத்தும் A4 அளவு தாள்களில் எழுதப்பெறல் வேண்டும்.

- ஆக்கங்களையும், முழுமைப்படுத்தப்பெற்ற படிவத்தையும், அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் நிழற்பிரதியினையும் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

தபால் முகவரி: Tamil Education Service Switzerland,
**Thaiponkal Vila 2024**
Regensbergstrasse 238,
8050 Zürich.

- ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்பெறும் சிறந்த 3 கட்டுரைகள், கவிதைகளுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பெறும்.

- முடிவுகள், வெற்றி பெற்றவர்களுக்கு 30.01.2024 ஆம் நாள் அறியத்தரப்பெறும். அத்துடன் அன்றைய நாள் தமிழ்க் கல்விச்சேவையின் இணையத்தளத்திலும் முகநூலிலும் முடிவுகளினை பார்வையிட்டு அறியலாம். சான்றிதழ்களும் பரிசில்களும் 03.02.2024 ஆம் நாள் சனிக்கிழமை நடைபெறும் தைப்பொங்கல்விழா நிகழ்வில் வழங்கப்பெறும். அத்துடன் கவிதைப்போட்டியில் ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் முதலாவது இடத்தைப் பெறுபவர்கள், தமது கவிதைகளை இப்பொங்கல்விழா நிகழ்வில் மேடையில் சமர்ப்பிக்கலாம்.

| பிரிவுகள் | வயதுப்பிரிவு | பிறந்தநாள் |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 7 – 12 வயது | 01.01.2011 - 31.12.2016 |
| இடைநிலைப் பிரிவு | 13 – 17 வயது | 01.01.2006 – 31.12.2010 |
| மேற்பிரிவு | 18 – 23 வயது | 01.01.2000 – 31.12.2005 |
| அதிமேற்பிரிவு | 24 வயதும் அதற்கு மேலும் | 31.12.1999 ஆம் நாளும் அதற்கு முன்னரும் |

**சொற்கள், வரிகளின் அளவு:**

| பிரிவு | கட்டுரைப்போட்டி<br>சொற்களின் எண்ணிக்கை | கவிதைப்போட்டி<br>வரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 50 – 100 சொற்கள் | 4 - 8 |
| இடைநிலைப் பிரிவு | 100 – 150 சொற்கள் | 8 - 12 |
| மேற்பிரிவு | 150 – 200 சொற்கள | 12 - 16 |
| அதிமேற்பிரிவு | 200 – 250 சொற்கள் | 16 - 24 |

வயதுப் பிரிவுகளின் அடிப்படையில் அனைவரையும் இப்போட்டிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலதிக விளக்கங்கள் ஏதாவது தேவைப்படுமிடத்து 044 440 2055 அல்லது 044 440 2056 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்புகொள்ள முடியும்.

நன்றி.

தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
சுவிற்சர்லாந்து தமிழ்ச்சங்கம்

12.12.2023.